செ.வெ.எண்:07 நாள்:03.02.2018

# அரியலூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்ட சிறப்பு மருத்துவ முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் மற்றும் செந்துறை ஒன்றியங்களில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வளாகங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (03.02.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

தா.பழூர் ஒன்றியம், சாத்தம்பாடி மற்றும் செந்துறை ஒன்றியம், இரும்புலிக்குறிச்சி ஆகிய கிராமங்களில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிகளில் நடைபெற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் இரத்த பரிசோதனை மற்றும் இ.சி.ஜி பரிசோதனை, கர்ப்பிணித்தாய்மார்கள் ஸ்கேன் பரிசோதனைகள், சிறப்பு கண் சிகிச்சை பிரிவு, காது மூக்கு, தொண்டை பிரிவு, சித்த மருத்துவப் பிரிவு, குழந்தை மருத்துவம், எச்.ஐ.வி பரிசோதனைகள், ஆகிய பரிசோதனைகள் இம்முகாம்களில் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் அவர்கள், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பின்னர், முகாமில் கலந்துகொண்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரத்தசோகை மற்றும் இரும்புசத்துக்கள் குறைவாக உள்ள கர்ப்பிணித் தாய்மார்களை கண்டறிந்து, அவர்களுக்கு இரத்த சோகை ஏற்படாத வகையில் இரும்பு சத்துள்ள மாத்திரைகள் மற்றும் உணவு வகைகளை உட்கொள்வதற்கான உணவு வகைகளை மருத்துவர்கள் பரிந்துரை செய்திட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

சாத்தம்பாடியில் நடைபெற்ற முகாமில் 1114 நபர்கள் கலந்துகொண்டார்கள். இதில், 102 நபர்கள் மேற் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். மேலும், இரும்புலிக்குறிச்சியில் நடைபெற்ற முகாமில் 826 நபர்கள் கலந்துகொண்டார்கள். இதில், 48 நபர்கள் மேற் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் அரியலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு மேற் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களின்கீழ் முகாம்கள் கிராமப்புறங்களில் நடத்தப்படுவதால், பொதுமக்கள் தங்களுடைய உடல் உள்ள சிறு, சிறு தொந்தரவுகள் முன்க்கூட்டியே கண்டறிந்து, அதற்கு ஏற்ற சிகிச்சைகள் மேற்கொள்ள இம்முகாம்கள் பயன் உள்ளதாக இருக்கும். இம்முகாமினை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாம்களில், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, தா.பழூர் வட்டார மருத்துவ அலுருவலர் மரு.தட்சனாமூர்த்தி, செந்துறை வட்டார மருததுவ அலுவலர் மரு.மேகநாதன் மற்றும் மருத்துவர்கள், மருத்துவப்பணியாளர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**